சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி,

திருவாரூர்.

MCOP.No.14/2022

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு.சிவஞானம் | த/பெ: காளிமுத்து | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 03.10.2024 | முகவரி: | |

முதல் விசாரணை...

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு மனுதாரர் தாக்கல் செய்த முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் ம.சா.1ன் முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகின்றது.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 14.12.2021 | முதல் தகவல் அறிக்கை | கணிணி நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | 13.12.2021 | விபத்து பதிவேட்டு ஆவணம் | உண்மை நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | -- | டிஸ்சார்ஜ் சம்மரி | உண்மை நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | -- | கிருஷ்ணா Diagnostics வழங்கிய சான்று | அசல் | ம.சா.ஆ.4 |
| 5 | 16.12.2021 | எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | உண்மை நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | -- | மருத்துவ பரிசோதனை ரிப்போர்ட்டுகள் | அசல் | ம.சா.ஆ.6 |
| 7 | -- | மருத்துவ கட்டண ரசீதுகள் ரூ.4,765/-க்கானது | அசல் | ம.சா.ஆ.7 |
| 8 | -- | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டநகல் அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.8 |
| 9 | -- | எனது குடும்ப அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டநகல் அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | -- | எனது வங்கி பாஸ் புத்தகம் | அசல் | ம.சா.ஆ.10 |
| 11 | -- | நுண்கதிர்படங்கள் 3 எண்ணிக்கை | அசல் | ம.சா.ஆ.11 |
| 12 | -- | சி.டி.ஸ்கேன் | அசல் | ம.சா.ஆ.12 |
| 13 | -- | எம்.ஆர்.ஐ.ஸ்கேன் | அசல் | ம.சா.ஆ.13 |

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக விபத்து நடந்த அன்றே என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அவ்வாறு விசாரித்தபோது நான் விவசாய வேலை செய்வதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விவசாய வேலை செய்வதாக தான் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செயப்ப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது வேலை மற்றும் வருமானத்தை காட்ட ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு முதுகு தண்டுவடத்தில் ஏற்பட்டதாக சொல்லப்படும்காயமானது விபத்தில் ஏற்பட்ட காயமில்லை என்றும், அதற்கு முன்பே எனக்கு இருந்த காயம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் பேருந்தின் பின் இருக்கையில்தான் அமர்ந்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். பேருந்தில் பின் சீட்டில் அமர்ந்து பயணம் செய்யும்போது அதிலிருக்கும் முன் இருக்கை கம்பிகள், பக்கவாட்டு கம்பிகள் ஆகியவைகளை கெட்டியாக பிடித்து பயணம் செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான். நானும் அவ்வாறுதான் பயணம் செய்தேன். ஆனால் பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஒட்டிச்சென்று, அதே வேகத்தில் வேகத்தடையில் ஏற்றி இறக்கிவிட்டதால் எனக்கு மனுவில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட்டுவிட்டது. பேருந்தை ஓட்டுநர் மெதுவாகவும், கவனமாகவும்தான் ஓட்டினார் என்றும் நான்தான் பேருந்தில் அஜாக்கிரதையாக

அமர்ந்து சென்று நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் காரணமல்ல என்பதால், எதிர்மனுதாரர் நான் கோரியுள்ள இழப்பீடை எனக்கு செலுத்த கடமைப்பட்டவர் அல்லார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.03 17:42:16 +0530